**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றம்**

# விதிகள்

1. இவ்விதிகள், 1988 ஆம் ஆண்டின் உயர் நீதிமன்ற (சட்டத்தரணிகளுக்கான நடத்தையும் ஒழுக்கமும் பற்றிய) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ் விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டுச் சேர்க்கப்பட்ட சட்டத்தரணி ஒவ்வொருவருக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. தாம் உயர் தொழில் பார்க்கின்ற தன்மையில் பதவி எதனையும் வகிக்கின்ற அல்லது நியமனம் எதனையும் கொண்டிருக்கின்ற சட்டத்தரணியொருவர். அத்தகைய ஊழியத்தில் தமது கடமைகளைச் சரிவரப் புரிவதற்கு அவசியமான அளவுக்குமட்டுமே உயர் தொழிலைச் செய்வதற்கு உரித்துடையவராவார்.

4. ஏதேனும் சட்டம் சம்பந்தமான விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் சட்டத்தரணியொருவர் தோன்றுவது பதிவுசெய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் வேறு சட்டத்தரணி எவரும் தோன்றுதல் ஆகாது. எப்படியிருப்பினும், அத்தகைய சட்டம் சம்பந்தமான விடயத்தில் அல்லது நடவடிக்கையில் நீதிமன்றமானது எவரேனும் சட்டத்தரணியை நியமிக்கலாம் அல்லது சாட்டுதல் செய்யலாம்.

## நெறிப்படுத்தல்களை ஏற்றுக்கொள்ளல்

5. ஏதேனும் விடயத்துக்காக அல்லது வழக்கு நடவடிக்கைக்காக சட்டத்தரணி ஒருவர், அத்தன்மையதான விடயத்திற்கு அல்லது வழக்கு நடவடிக்கைக்கு ஏதேனும் நீதிமன்றத்தில் நியாய சபையின் அல்லது நீதி நிருவாகத்துக்கெனத் தாபிக்கப்பட்ட வேறு நிறுவனத்தின் முன்னருள்ள ஏதேனும் விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் அல்லது ஏதேனும் உயர்தொழில்சார் விடயத்தில் திறத்தவர் ஒருவரின் சார்பில் அல்லது ஆளொருவரின் சார்பில் அவரின் அல்லது

அவரின் கட்டணத்துக்கு செயலாற்ற மறுத்தலாகாது.

ஆயின் எவ்வாறாயினும் அவருடைய உயர்தொழில் சுதந்திரத்தை அவர் பேணுவதைக் கடினமாக்கும் அல்லது அத்தகைய உயர்தொழில் விடயத்தை ஏற்றுக்கொள்வது நீதி திருவாகத்தில் சிறந்த அக்கறைகளுக்கு இசைந்ததல்லாததாக இருக்கும் என அவர் அபிப்பிராயப்படுகின்ற சிறப்பான சூழ்நிலைகளில் சட்டத்தரணியொருவர் கட்சிக்காரர் ஒருவருக்காக செயலாற்ற மறுக்கலாம்.

6. சட்டத்தாணியொருவர் எவ்வுயர்தொழில் விடயங்களில் தனிப்பட்ட அக்கறை கொண்டிருக்கிறரோ, அவ்வுயர் தொழில் விடயங்களில், சொல்லப்பட்ட அக்கறைபற்றிக் கட்சிக்காரருக்கு முழுமையான வெளிப்படுத்தலைச் செய்தால் ஒழியவும், அத்துடன் தமக்காக அச்சட்டத்தரணி செயலாற்றுவதில் தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையெனக் கட்சிக்காரரின் எழுத்திலான வெளிப்படுத்துகையொன்றைப் பெற்றுக்கொண்ட பின்னரேயொழியவும் எவரேனும்

நிறத்தவருக்காக அல்லது எவரேனும் ஆளுக்காகச் செயலாற்றுதல் ஆகாது.

7. ஏதேனும் உயர்தொழில் விடயத்தில் சட்டத்தாணி ஒருவர் செயலாற்றுவது அல்லது ஆலோசனை கூறுவது அத்தகைய உயர்தொழில் விடயத்தில் அல்லது தொடர்புபட்ட உயர்தொழில் விடயத்தில் வேறு எவரேனும் கட்சிக்காரரின் அக்கறையுடன் முரண்பாடுடையதாயிருக்குமென அவர் அப்பிராயப்பட்டால் அத்தகைய ஏதேனும் உயர்தொழில் விடயத்தில் அவர் தோற்றவோ அல்லது ஆலோசனை கூறவோ கூடாது.

8. எந்த இரு அல்லது அதற்கு மேற்பட்ட கட்சிக்காரர்களுக்கிடையில் சட்டத்தாணி செயலாற்றுகிறாரோ அக்கட்சிக்காரர்களின் அக்கறைகளுக்கிடையில் முரண்பாடொன்று எழுகின்றவிடத்து, தமக்கு ஏதேனும் உயர்தொழில்சார் ஒழுங்கின்மை இல்லாது அல்லது சங்கடம் இல்லாமல் அத்தகைய எவரேனும் ஒரு கட்சிக்காரருக்காக அல்லது அதற்குமேற்பட்ட கட்சிக்காரர்களுக்காகத் தாம் தோன்றமுடியுமென அவர் முடிவு செய்தாலொழிய, (ஆயின் அவர் அப்படித்

தோன்றலாமென அத்தசைய மற்றக் கட்சிக்காரர்கள் உடன்படுதல் வேண்டும்). அத்தகைய எல்லாக் கட்சிக்காரர்களுக்கும் செயலாற்றாதொழில் வேண்டும்.

9. சட்டந்தரணியொருவர் தாம் ஏதேனும் பதவியை வகிக்கும் அல்லது நியமனத்தைக் கொண்டிருக்கும் காரணத்தினால் தமக்குச் சங்கடம் ஏற்படுத்தக்கூடுமென அவர் அபிப்பிராயப்படுகின்ற ஏதேனும் உயர்தொழில் விடயத்தை ஏற்றுக்கொள்ளலாகாது.

10. ஏதேனும் உயர்தொழில் விடயத்தை அதனைத் தகுந்த அவதானத்துடன் தாம் கவனிக்கமுடியுமென்றாலொழிய சட்டத்தரணியொருவர் ஏற்றுக் கொள்லலாகாது.

11. தவறொன்று புரியப்படுவதில் அல்லது புரியப்படுதலுக்கு உதவி செய்வதில் தம்மைச் சம்பந்தப்படுத்தக்கூடிய ஏதேனும் உயர்தொழில் விடயத்தைச் சட்டத்தாணியொருவர் ஏற்றுக்கொள்ளலாகாது.

12. எவ்வுயர்தொழில் விடயம் தொடர்பில், தாம் சாட்சியொருவராகத் தேவைப்படுத்தப்படுவார்

என அவருக்குத் தெரிகின்றதான அல்லது அப்படித் தேவைப்படுத்தப்படுவார் என அவர் நம்புவதற்கு அவருக்குக் காரணமாயிருக்கின்றதான அவ்வுயர்தொழில் விடயம் எதனையும் சட்டத்தரணி ஒருவர் ஏற்றுக்கொள்ளலாகாது. ஏதேனும் உயர்தொழில் விடயத்தை ஏற்றுக்கொண்ட பின்னர், அதே விடயத்தில் தாம் சாட்சியொருவராகத் தேவைப்படுத்தப்படுவாரெனச் சட்டத்தரணியொருவர் காணுகின்றவிடத்து, இதே விதி ஏற்புடையதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், விதிமுறையான அல்லது வாதத்துடன் தொடர்பில்லாத ஏதேனும் விடயம் தொடர்பில் மட்டும் தாம் சாட்சியொருவராகத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான உயர்தொழில் விடயம் எதனையும் சட்டத்தரணியொருவர் ஏற்றுக்கொள்ளலாம்.

13. அதே சட்டக் குழுமத்திலிருந்தான சட்டத்தரணியொருவர், ஏதேனும் விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் தனிவேறான திறத்தவர்களுக்காக அத்தகைய திறத்தவர்களுக்கிடையில் அக்கறைகளின்

முரண்பாடொன்று இருக்குமிடத்து அல்லது இருக்கக்கூடிய சாத்தியமிருக்குமிடத்து தோன்றக்கூடாது.

ஆயின், இவ்விதியானது, பிணக்கிற்கான திறத்தவர்களுக்கிடையில் பிணக்கை இணங்கித் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன், அல்லது இணக்கம் செய்யும் நோக்கத்துடன் செய்யப்படும் பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்புடையதாதலாகாது.

14. இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட உதவித் திட்டத்தில் எச்சட்டத்தரணியொருவரின் பெயர் காணப்படுகின்றதோ, அச்சட்டத்தரணி, எக்கட்சிக்காரரொருவரின் தகவுடைமை சொல்லப்பட்ட திட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதோ அக்கட்சிக்காரரொருவருக்கு, அத்தகைய கட்சிக்காரருக்கு மேலதிக விதிப்பனவுகள் இல்லாமல் இதற்கு முன்னர் கூறப்பட்டுள்ள காரணங்களுள் எதற்காகவேனும் ஆலோசனை வழங்க மறுப்பது அல்லது அத்தகைய அறிவுறுத்துரைகளை ஏற்க மறுப்பது தமக்குச் சரியெனத் தம் தற்றுணிபின் பேரில் அவர்

முடிவுசெய்தாலொழிய, தமது உயர் தொழில் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

அதேபோன்று, சாட்டுதல் செய்யப்பட்ட வழக்குரைஞர் ஒருவர் அரசினால் செலுத்தப்படும் கட்டணத்தைவிட எக்குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவரின் எதிர்வாதத்தை அவர் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றாரோ, அக்குற்றஞ் சாட்டப்பட்டவரிடமிருந்து, கட்டணம் எதனையும் விதிப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

## தொடர்புரிமைப் பணம் பெற்ற பின்னர்

15. கட்சிக்காரர் ஒருவரிடமிருந்து அல்லது எவரேனும் கட்சிக்காரரின் சார்பில் ஏதேனும் உயர்தொழில் விடயத்தை ஏற்றுக்கொண்டதன்மேல், அத்தகைய விடயத்தில் தமது கட்சிக்காரரின் சிறந்த அக்கறைகளுக்காக, தாம் தீர்மானிக்கின்றவாறாக அத்துடன் தமக்கோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு வரக்கூடிய கசப்பான விளைவுகள் எவற்றையும் கருத்திற்கொள்ளாது, தமது திறமைக்கும் கவனத்திற்கும் ஏற்ப, தகுந்த அவதானத்துடன் தமது திறனைப்பிரயோகிப்பது

சட்டத்தரணியொருவரின் கடமையாதல் வேண்டும். மேலும், அவர் தோன்றுகின்ற நீதிமன்றத்திற்கு, நியாயசபைக்கு அல்லது வேறு நீதி நிருவாகத்திற்கெனத் தாபிக்கப்பட்ட நிறுவனத்திற்கு அவர் செய்யவேண்டிய கடமைக்கும், அத்துடன் அவருக்கு எதிராக தோன்றுகின்ற சக சட்டத்தரணிகளுக்கும், எல்லா நேரத்திலும் மதிப்புக்கொடுத்து நடத்தல் வேண்டும்

16. ஏதேனும் நீதிமன்றத்தில், நியாயசபையில் அல்லது நீதி நிருவாகத்துக்கெனத் தாபிக்கப்பட்ட வேறு நிறுவனத்தில் எவையேனும் வழக்கு நடடிக்கையில் சட்டத்தரணியொருவரின் சேவைகள் அமர்த்தப்பட்டிருக்குமிடத்து, தமது கட்டுப்பாட்டுக்கு மீறிய சூழ்நிலைகளினால் தடைசெய்யப்பட்டாலொழிய, அத்தகைய வழக்கு நடவடிக்கையில் தோன்றுவது அத்தகைய சட்டத்தரணியின் கடமையாதல் வேண்டும்.

17. சட்டத்தரணியொருவர், தாம் அமர்த்தப்பட்டிருக்கும் ஏதேனும் உயர்தொழில் விடயத்தில், தமது கட்சிக்காரரிடமிருந்து பங்கு அனுகூலம் எடுத்தல் ஆகாது.

18. சட்டத்தரணியொருவர், தமது கட்சிக்காரர்களுக்கு வழங்கும் ஆலோசனையிலும் அவர்களுடனான எல்லாத் தொடர்புகளிலும், பூரணமான திறந்த மனதுடனும், நேர்மையுடனும் நடத்தல் வேண்டும்.

(அ) சட்டத்தரணியொருவர் தமது கட்சிக்காரருக்கு நட்டம் ஏற்படுகின்ற விதத்தில் அத்துடன் அல்லது பங்கம் விளைகின்ற விதத்தில் ஒருபோதும் உத்து கொள்ளலாகாது.

## சட்டத்தரணியொருவராகச் செயலாற்றாதொழிதல்

19. சட்டத்தரணியொருவர், கட்சிக்காரர் ஒருவரிடமிருந்து நெறிவுறுத்தல்களை ஏற்றுக்கொண்டதன்மேல், நல்ல காரணமின்றி, அவை தொடர்பில் தமது மீளப்பெறாமல் இருக்கக் கடமைப்பட்டுள்ளார்.

20. கட்சிக்காரர் ஒருவர் தமது சட்டத்தரணியின் ஆலோசனையை ஏற்று அதன்படி நடக்கமறுத்து,

அத்துடன் அத்தகைய சட்டத்தரணி தமது கட்சிக்காரருக்காகத் தொடர்ந்து செயலாற்றுவது தமக்குத் தகாதென அல்லது சங்கடத்தைக் கொடுக்கலாமென முடிவு செய்கின்றவிடத்து, அல்லது சட்டத்தரணி ஒருவருக்கும் அவரது கட்சிக்காரருக்குமிடையில் நம்பிக்கை இழப்பு ஏற்படுகின்றவிடத்து, அத்தகைய சட்டத்தரணி அத்தகைய கட்சிக்காரருக்காகச் செயலாற்றாதொழியலாம்.

21. சட்டத்தரணியொருவர் கட்சிக்காரர் அவ்வாறு வேண்டப்பட்டதன்மேல், தமது கட்சிக்காரரின் சார்பில் மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் எதுவும் இல்லாமல் போகும்படியான சூழ்நிலைகளில் மேலதிக நெறிவுறுத்தல்களை அவர் வழங்க மறுத்தால் அல்லது வழங்குவதற்கு அசட்டை செய்தால், ஏதேனும் உயர்தொழில் விடயத்தில் அல்லது வழக்கு நடவடிக்கையில் தமது கட்சிக்காரருக்காகச் செயலாற்றாதொழியலாம்.

22. சட்டத்தரணியொருவர். ஏதேனும் உயர்தொழில் விடயம் தொடர்பில் தமது கட்டணங்களைச் செலுத்த அல்லது செலவுதொகைகளுக்கு ஏற்பாடு செய்யக் கட்சிக்காரர் தவறியதன்மேல்,

அத்தகைய ஏதேனும் உயர்தொழில் விடயத்திலிருந்து மீளலாம்.

23. சட்டத்தரணியொருவர், தமது உயர்தொழிலைப் புரியாதொழிகின்றவிடத்து, அத்தகைய தொழில் புரியாதொழிதல் பற்றித் தமது கட்சிக்காரருக்கு அல்லது கட்சிக்காரர்களுக்கு நியாயமான கால அறிவித்தல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார்.

24. சட்டத்தரணியொருவர், பங்காண்மையில், தமது உயர்தொழிலைப் புரிகின்றவிடத்து, அத்துடன் சொல்லப்பட்ட பங்காண்மைக் குழுமத்தைக் கலைப்பதற்கு அல்லது அதை வேறொரு குழுமத்துடன் ஒன்றிணைப்பதற்கு நாடப்படுமிடத்து, அவ்வாறு தொழில் புரியாது ஒழிகின்றமை பற்றி அதன் கட்சிக்காரர்களுக்கு அறிவித்தல் கொடுப்பது அவ்வாறு தொழில் புரியாதொழிகின்ற அல்லது;

25. சட்டத்தரணியொருவர், கட்சிக்காரர் தமது சார்பில் செயலாற்றவேண்டாம் என வேண்டிக்கொண்டால், அக்கட்சிக்காரர் சார்பில் செயலாற்றாதொழிதல் வேண்டும்.

26. சட்டத்தரணியொருவர், அவரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்ட கட்சிக்காரரின் எல்லா ஆதனத்தையும் பேணிப்பாதுகாத்தல் வேண்டும்.

## கட்டணங்களும் செலவுதொகைகளும்

27. கட்சிக்காரரின் அல்லது கட்சிக்காரராக வர இருப்பவரின் வறுமை அல்லது கஷ்டம் காரணமாக அல்லது அவ்வாளில்லாதுவிடின், கட்சிக்காரர் அல்லது கட்சிக்காரராக வர இருப்பவர் சட்ட ஆலோசனையை அல்லது சட்டரீதியான பிரதிநித்துவத்தைப் பாரதூரமாக இழந்துவிடுவார் என்னுமிடத்து, சட்டத்தரணியொருவர், உயர்தொழிலின் சிறந்த மரபுகளுக்கேற்ப கட்டணமொன்றைக் குறைக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

28. சட்டத்தரணியொருவர், குறித்த நோக்கமொன்றுக்காகத் தம்மால் நம்பிக்கைப்பொறுப்பில் வைத்திருக்கப்படும் தமது கட்சிக்காரரின் நிதியெதையும் தமது கட்சிக்காரரின் அனுமதியின்றித் தமக்கு உரித்தாக்குதல் ஆகாது.

29. "தொடர்புரிமை பணம்" என்பது சட்டத்தரணியொருவரது கட்டணங்களைக் கொடுப்பதற்கும் அவர் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்திகைளுக்கும் அமைவாக, கட்சித்தாரர் அந்நேரத்தில் சம்பந்தப்பட்டிருக்கக்கூடியதான வழக்காடல் எதிலும் தமக்காக அவரை ஏற்படுமாறு கட்சிக்காரர் செய்கின்ற ஈடுபடுத்துகையொன்று எனப் பொருள்படும்.

"சிறப்புத் தொடர்புரிமைப் பணம்" என்பது, தொடரப்படக்கூடிய ஏதேனும் துடர்ச்சியில் அல்லது வழக்கில் சட்டத்தரணியொருவரை, அவருக்கான கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக, அவரைத் தமக்காகத் தோன்றுமாறு அல்லது செயலாற்றுமாறு கட்சிக்கார் ஒருவர் செய்கின்ற ஈடுபடுத்துகையொன்று எனப் பொருள்படும்.

"பொதுத் தொடர்புரிமைப் பணம் " என்பது கட்சிக்காரர் ஒருவர் எந்நேரத்திலும் தொடர்புடையதாயிருக்கக்கூடிய வழக்காடலின் எல்லா விடயங்களிலும், சட்டத்தரணி ஒருவரின் கட்டணங்களின் கொடுப்பனவுக்கும், அவர் விதித்துரைக்கக்கூடியதான அத்தகைய

நியதிகளுக்கும் அமைவாக, தமக்காக அவரை ஏற்பாடுமாறு கட்சிக்காரர் ஒருவரினால் செய்யப்படும் ஈடுபடுத்துகையொன்று எனப் பொருள்படும்.

30. (அ) சட்டத்தரணியொருவருக்குப் பொதுத் தொடர்புரிமைப் பணம் கொடுக்கப்பட்டபின்னர், அத்தகைய தொடர்புரிமைப் பணம் ஏற்புடைத்தாகும் குறிப்பிட்ட விடயமொன்று தொடர்பில் கட்சிக்காரர் அத்தகைய சட்டத்தரணிக்கு நெறிவுறுத்தல் வழங்காத விடத்து, அத்துடன், சட்டத்தரணி கட்சிக்காரரிடம் ஏன் தமக்கு நெறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை என வினாவிய பின்னர் நியாயமானளவு காலப்பகுதியொன்று கழிந்துவிட்டிருந்தால், அத்தகைய சட்டத்தரணி சொல்லப்பட்ட தொடர்புரிமைப் பணத்தை அவ்விடயம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்டதாக நடத்து கொள்ளலாம்.

(ஆ) சிறப்புத் தொடர்புரிமைப் பணம் தொடர்பில் ஏற்புடைத்தானவிடத்து அதே நெறிகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## அந்தரங்கத் தகவல்

31. சட்டத்தரணியொருவர், தமது கட்சிக்காரரின் தொழில், மற்றும் அலுவல்கள் தொடர்பிலானதும், அவைபற்றியதுமான ஏதேனும் விடயத்தில் தமது கட்சிக்காரரிடமிருந்து அல்லது அவரின் சார்பில் தம்மால் பெறப்பட்ட வாய்மூலமான அல்லது ஆவணமூலமான எல்லாத் தகவலையும் மிகவும் கண்டிப்பான அந்தரங்கத்தோடு வைத்திருத்தல் வேண்டும்.

32. சட்டத்தரணியொருவர், தமது கட்சிக்காரரினால் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ அதிகாரமளிக்கப்பட்டிருந்தால் அல்லது அவர் மரணமடைந்தவிடத்து, அவரின் சட்டரீதியான பிரதிநிதியினால் அதிகாரமமிக்கப்பட்டிருந்தால், அத்தகைய தகவலை வெளிவிடலாம். அப்போதும் சூழ்நிலைகளுக்கு அவசியமானவாறான அத்தகைய தகவலை மட்டுமே (அதற்குமேல் வெளிவிடலாகாது) வெளிவிடுவதில் அவர் கவனமாயிருத்தல் வேண்டும்.

33. அந்தரங்கத் தகவலை வெளிவிடாமல் இருக்கும் சட்டத்தரணியின் கடமையானது கட்சிக்காரருடனான அவரது உயர்தொழில் தொடர்பு இருக்கும்போது மட்டுமல்லாது, சொல்லப்பட்ட கட்சிக்காரருக்காக அவர் செயலாற்றாதொழிந்தபின்னரும், அத்துடன் கட்சிக்காரர் இறந்த பின்னரும் கூட காலவரையறையின்றித் தொடர்ந்தும் சட்டத்தரணி மீது இருக்கும்.

34. இக்கடமையானது. உயர்தொழிலிலிருக்கும் சட்டத்தாணியுடைய பங்காளர் அல்லது இணையாளர் எவருக்கும் அத்துடன் அத்தகைய சட்டத்தரணியினுடைய ஊழியர் எவருக்கும் விரிவுபடல் வேண்டும். வழமையான தொழில் நெறிமுறையின்போது அத்தகைய தகவல் பற்றி அவருக்குத் தெரியவந்தால் அத்தகைய ஆளுடனான அவருக்குள்ள தொடர்பு முடிவுறுத்தப்பட்ட பின்னரும், அத்தகைய ஆளினால் அத்தகைய தகவல் வெளிவிடப்படுவதைத் தடுக்கின்ற எல்லா நியாயமான நடபடிகளையும் எடுப்பது, சொல்லப்பட்ட சட்டத்தரணிக்குக் கடமையாதல் வேண்டும்.

35. தமது கட்சிக்காரர் பற்றிய அத்தகைய அந்தரங்கத் தகவலை வைத்திருக்கின்ற சட்டத்தரணியொருவர், அதே விடயத்தில் அல்லது முரண்பாடொன்று இருக்கின்ற வேறு ஏதேனும் விடயத்தில் அல்லது அத்தகைய விடயத்தில் தமது கட்சிக்காரருக்கும் இன்னொரு கட்சிக்கும் முரண்பாடொன்று இருக்கக்கூடிய சாத்தியக்கூறு இருக்குமிடத்து, எதிர்த்திறத்தவருக்காக உயர் தொழில் விடயம் எதனையும் பொறுப்பேற்பது அவருடைய உயர்தொழில் ஒழுக்கத்திற்கு முரணாக அமையும். மேலும், அத்தகைய தகவலானது, வேறேதேனும் உயர்தொழில் விடயத்தில் தம்முடைய முன்னைய கட்சிக்காரருக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியவகையில் பயன்படுத்தக்கூட்டுமானால், சொல்லப்பட்ட சட்டத்தரணியானவர், அத்தகைய வேலையைப் பொறுப்பேற்றல் ஆகாது.

36. எதிர்க்கட்சிக்காரர் சார்பில் உயர்தொழில்சார் வேலை எதனையும், அதே உயர் தொழில்சார் வேலை தொடர்பில் முந்திய கட்சிக்காரரினால் அமர்த்தப்பட்டிருந்தவிடத்து, சட்டத்தரணி ஒருவர் அத்தகைய அந்தரங்கத் தகவல்

எதனையும் பெற்றிருக்காவிடில், அவர் ஏற்றுக் கொள்வதற்கு ஆட்சேபனை எதுவும் கிடையாது.

37. மேற்கூறப்பட்டுள்ள ஏற்பாடுகள், சட்டக்குழுமமொன்று இன்னொரு சட்டக்குழுமத்துடன் ஒன்றிணையும் போது அல்லது புதியதொரு சட்டக்குழுமம் அமைக்கப்படும் போது ஏற்புடையனவாதல் வேண்டும்.

38. சட்டத்தரணியொருவர், 32 ஆம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர, அத்துடன் ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்கு அமைய பின்வரும் சந்தர்ப்பங்களில் அந்தரங்கத் தகவலை வெளியிடலாம்.

1. தமது கட்சிக்காரரினால், பிற நடவடிக்கைக்காக அல்லது துர்ப்பழக்கத்துக்காகச் செய்யப்படும் சார்த்துரையிலிருந்து தம்மை அல்லது தமது இணயாளர்களை அல்லது ஊழியர்களைக் காப்பதற்கு.

2. குற்றமொன்று மோசடியொன்று அல்லது சட்டவிரோதமான செயலொன்று புரியப்படுவதைத் தடுப்பதற்கு :

(3) கூட்டுத்தொடர்புரிமைப்பண்பொன்றின் விடயத்தில் அல்லது கட்சிக்காரருக்கு வேறு ஆட்களோடு கூட்டு அக்கறை இருக்குமிடத்து விடயத்துக்கேற்றவாறு அத்தகைய கூட்டுத் தொடர்புரிமைப்பாளர் உறுப்பினர்களுக்கு அல்லது கட்சிக்காரருடன் கூட்டு அக்கறையொன்று கொண்டுள்ள அத்தகைய உறுப்பினர்களுக்கு சொல்லப்பட்ட அந்தரங்கத் தகவலை வெளியிடலாம்.

## ஆட்கூட்டுதலும் விளம்பரம் செய்தலும்

39. சட்டத்தரணியொருவர், எச்சூழ்நிலைகளிலும் தாமாகவோ அல்லது வேறெருவர் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆட்கூட்டும் பழக்கத்தில் ஈடுபடுதல் ஆகாது–

"ஆட்கூட்டுதல்" என்னும் பதம் பின்வரும் செயல்களை அல்லது நடத்தையை உள்ளடக்குதல் வேண்டும்

(1) கட்சிக்காரர்களைப் பரிந்து கேட்டுச் சேர்ப்பதற்காக ஏதேனும் தரகு கொடுத்து, கொடுப்பனவு செய்து அல்லது கைம்மாறு

செய்து எவ்விதத்திலேனும் எவரேனும் ஆளின் சேவைகளை ஈடுபடுத்துதல்.

(2) கட்சிக்காரர்களை நேர்மையற்ற முறையில் தம்பால் ஈர்க்கும் நோக்கத்துக்காக, ஏதேனும் விடயத்தில் விளம்பரம் செய்தல்.

40. சட்டத்தரணியொருவர், தமது உயர்தொழில் பற்றிய பெயர்த் தகட்டினை ஒன்றில் தமது அலுவலகத்திலோ அல்லது வதிவிடத்திலோ அல்லது அலுவலகத்திலும் வதிவிடத்திலுமோ வெளிக்காட்டி வைக்கலாம்.

(அ) பெயர்த் தகடானது, பின்வரும் தகவல்களை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும் –

1. சட்டத்தரணியின் பெயர் அத்துடன் குழுமத்தின் பெயர்.
2. சட்டத்தரணியின் அல்லது சட்டக்குழுமத்தின் உறுப்பினர்களாக அல்லது பங்காளர்களாக இருக்கின்றவர்களின் “சட்டத்தரணி”, “பிரசித்த நொத்தாரிசு”, “சொலிசிற்றர்”, “சத்திய ஆணையாளர்”, ஜே.பீ, யு.எம் ஆகிய விவரணங்கள் போன்ற உயர்தொழில் தகைமைகள்.

3. பல்கலைக்கழகப் பட்டங்கள் போன்ற கல்விசார் தகைமைகள்.
4. அலுவலக நேரங்கள்.

ஆ) சட்டத்தரணியொருவரின் அலுவலகத்துக்குச் செல்லும் திசைகளைக் குறித்துக்காட்டும் வெளிச்சமூட்டப்பட்ட பெயர்த்தகடுகளோ அல்லது பெயரப்பலகைகளோ பயன்படுத்தப்படலாகாது.

இ) உயர்தொழில்சார் அல்லது சட்டக்குழுமத்தின் பெயர்த்தகடானது, சட்டத்தரணியின் அலுவலகத்தை அல்லது வதிவிடத்தைக் கட்சிக்காரர்கள் கண்டுபிடிக்கக்கூடியதான அத்தகைய நியாயமான அளவினதாக இருந்தல் வேண்டும்

41. சட்டத்தரணி ஒருவர் தாம் தொழில் புரியும் வளவை மாற்றுகின்றவிடத்து, தமது புதிய முகவரியையுடைய அறிவித்தலொன்றை நியாயமானதொரு காலத்திற்கு தமது முத்திய வளவில் அவர் விட்டுவைக்கலாம்.

42. சட்டத்தரணி ஒருவர் உயர்தொழில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை வைத்திருத்தல் வேண்டும். அவ்வுயர்தொழில் ஆவணங்கள்

பின்வரும் தகவல்களை மாத்திரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) சட்டத்தரணியின் அல்லது சட்டக்குழுமத்தின் பெயர், முகவரி, வதிவிட முகவரி, தொலைபேசி எண், டெலெக்ஸ் எண், தபாற்பெட்டி எண், சட்டக்குழுமத்தின் கேபில் முகவரி, அலுவலக நேரங்கள்:

(2) சட்டக்குழுமத்தின் பங்காளர்களின் அல்லது உறுப்பினர்களின் பெயர்கள்.

(3) சட்டக்குழுமத்தின் பங்காளர்களாக அல்லது உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்கள் உட்பட சட்டத்தரணியின் உயர்தொழில்சார் தகைமைகளும் உயர்கல்விசார் தகைமைகளும்.

:

(4) சட்டக்குழுமங்களின் விடயத்தில். விடயத்துக்கேற்றவாறு. "சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிசுகளும்" அல்லது "சட்டத்தரணிகளும் சொலசிற்றர்களும்" என்று விவரணம். செய்யப்படலாம்.

43. சட்டத்தரணி ஒருவர் அல்லது சட்டக்குழுமொன்று, காசோலைகளிலும் தபால்

உறைகள் மீதும் ஆவணங்களிலும் தமது அல்லது குழுமத்தினது பெயர், முகவரி, விவரணம் ஆகியவற்றை எழுதலாம்.

44. சட்டத்தரணியொருவர், தமது பெயர், உயர்தொழில்சார் அல்லது வதிவிடமுகவரிகள் அத்தகைய தொலைபேசி எண்கள், உயர்தொழில்சார், அத்துடன் கல்விசார் தகைமைகள் அத்துடன், அவர் எச்சட்டக்குழுமத்தின் உறுப்பினர் ஒருவராக இருக்கக்கூடுமோ, அச்சட்டக்குழுமத்தின் பெயர் ஆகியவற்றைக் கொண்டிருக்கும் அட்டையொன்றைப் பயன்படுத்தலாம்.

45. சட்டத்தரணியொருவர் அல்லது சட்டக்குழுமமொன்று, தமது அல்லது அதனது பெயரை, முகவரியை அத்துடன் விவரணத்தை ஏதேனும் பட்டியலில் அல்லது சட்ட விபரக்கொத்தில் அல்லது தொலைபேசி விபரக்கொத்து உட்பட அத்தகைய வேறு எவையேனும் விபரக்கொத்துகளில் 40 ஆம் விதியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கொண்டிருக்கலாம்.

46. சட்டத்தரணியொருவர், ஏதேனும் சட்டம்சார் அல்லது உயர்தொழில் விடயம் தொடர்பில், வானொலியில் பேசலாம், தொலைக்காட்சியில் தோன்றலாம், விரிவுரையொன்றாற்றலாம். அல்லது பத்திரிகைக்குப் பேச்சொன்று அல்லது நேர்முக உரையாடலொன்று கொடுக்கலாம் அல்லது பதிப்பிடுவதற்கென கட்டுரையொன்றை அல்லது கடிதமொன்றை எழுதலாம்.

47. குறிப்பிட்ட சந்தர்ப்பமொன்றில் தமது பெயர் விளம்பரம் செய்யப்படுமெனச் சட்டத்தரணியொருவருக்குத் தெரியுமிடத்து, அல்லது அப்படி நம்புவதற்கு அவருக்குக் காரணமிருக்குமிடத்து, விளம்பரம் செய்தல் தொடர்பில் இதில் தரப்பட்டுள்ள விதியெதனையும். அத்தகைய விளம்பரம் மீறாமலிருப்பதற்கான நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் அவர் எடுத்தல் வேண்டும்.

48. சட்டத்தரணியொருவர், கட்சிக்காரர் ஒருவரின் அல்லது முந்திய கட்சிக்காரனின் தொழில் தொடர்பிலான விடயம் எதுவும் பற்றி அத்தகைய கட்சிக்காரரின் சம்மதமின்றி நேர்முக உரையாடல் அல்லது ஒலிபரப்பல் எதுவும்

கொடுத்தலோ அல்லது அவ்விடம் வெளிப்படுதலை அனுமதித்தலோ ஆகாது.

49. சட்டத்தரணியொருவர் பின்வருவனபற்றிய எவையேனும் விபரங்களை வெளியிடச் செய்வித்தலோ அல்லது அவை வெளியிடப்படுதலை அனுமதித்தலோ ஆகாது.

(1) அவருடைய தொழில் ;அல்லது

(2) எவ்விடயம்; தொடர்பில்; அவருக்கு அறிவுறுத்துரைகள் கிடைத்திருக்கின்றனவோ அவ்விடயம் தொடர்பிலான அந்தரங்கத் தகவலை வெளிவிடாமலும் அவ்விடயத்தில் அவரது ஏற்படுகைக்குப் பிரபல்யம் கொடுக்காமல் அல்லது அதில் அவரது பங்களிப்பை வெளிவிடாமலும் அவரினால் செய்யமுடியுமென்றாலொழிய அவ்விடயத்தை வெளிவிடச் செய்வித்தலோ வெளியிட அனுமதித்தலோ ஆகாது.

## நீதிமன்றத்துடனான தொடர்பு

50. எந்நீதிமன்றமொன்றுக்குமுன்; நியாயமன்றுக்கு முன் அல்லது நீதி நிருவாகத்துக்கெனத் தாபிக்கப்பட்ட வேறு நிறுவனத்துக்குமுன்

சட்டத்தரணியொருவர் தோன்றுகின்றாரோ அவர் அந்நீதிமன்றத்துக்கு நியாயமன்றுக்கு அல்லது வேறு நிறுவனத்துக்கு நீதிநிருவாகத்தைச் செவ்வனே நிருவகிப்பதில் சட்டத்தரணிகள் குழாத்தின் 'சுதந்திரத்தில் தலையீடு செய்யாமல் உதவி புரிவதற்கான கடமையொன்றை கொண்டிருக்கின்றார்.

51. சட்டத்தரணியொருவர் எந்நீதிமன்றத்துக்கு நியாயமன்றத்துக்கு அல்லது நீதிநிருவாகத்துக்கெனத் தாபிக்கப்பட்ட நிறுவனத்துக்கு முன் தோன்றுகின்றாரோ அந்நீதிமன்றத்தை நியாயமன்றத்துக்கு அல்லது வேறு நிறுவனத்தை அவர் எவ்விதத்திலும் தவறாக இட்டுச்செல்லுதலாகாது அல்லது ஏமாற்றக் கூடாதென்பதுடன் தமது கட்சிக்காரர் அவ்விதம் செய்வதை அனுமதித்தலும் ஆகாது.

52. வழக்குத் தொடருநர் தரப்பில் தோன்றும் சட்டத்தரணியொருவருக்கு எவ்விடயத்தை வெளியிடாமல் வைத்திருந்தால் அது தவறான நீதி வழங்குதலுக்கு இட்டுச் செல்லக்கூடுமோ அவ்விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வருதல் கடமையாதல் வேண்டும்.

53. (1) சட்டத்தரணியொருவர் எதிர்;த்திறத்தவரை சாட்சிnahUtiu my;லது வேறு எவரேனும் ஆளை அனுமதிப்பதற்காக அல்லது இழிவுபடுத்துவதற்காக மட்டும் வினாத்தொடுத்தலோ அல்லது கூற்றெதையும் செய்தலோ ஆகாது.

(2) சட்டத்தரணியொருவர் சாட்சியொருவரின் துர்க்குணம் அவரால் புரியப்பட்ட மோசடி குற்றவியல் தவறொன்று அல்லது அவரின் நம்பகமற்றதன்மை ஆகியவைபற்றி அவைபற்றிய அத்தகைய சார்த்துதலானது ஆதாரமற்றது அல்லது உண்மையற்றது என 'நம்புவதற்கு அவருக்குக் காரணமிருந்தால் சுட்டிக்காட்டுகின்ற அல்லது குறிப்பாகக் கூறுகின்ற கூற்றுக்களைச் செய்தலோ அல்லது சாட்சியொUthpடம் அத்தகைய வினாத்தொடுத்தலோ ஆகாது.

54. எந்நீதிமன்றத்துக்குமுன் நியாயமன்றத்துக்குமுன் அல்லது வேறு நீதி நிருவாகத்துக்கெனத் தாபிக்கப்பட்ட நிறுவனத்துக்கு முன் சட்டத்தரணியொருவர் தோன்றுகின்றாரோ அந்நீதிமன்றத்தின் நியாயமன்றின் அல்லது நிறுவனத்தின் முன்னரான அவரின் நடத்தையில் தமது சொந்த

உணர்ச்சிகளோ அல்லது அக்கறையோ செல்வாக்குப் பெறுவதை அனுமதித்தல் ஆகாது.

55. சட்டத்தரணியொருவர் எந்நீதிபதிக்குமுன் அல்லது வேறு தலைமைதாங்கும் அலுவலருக்குமுன் தோன்றுகின்றாரோ அந்நீதிபதியுடன் அல்லது தலைமைதாங்கும் அலுவலருடன் எதிர்த்திறத்தினர் வருகை தராதபோது. வழக்கொன்றின் குணநலன்கள் பற்றிக் கலந்துரையாடலாகாது.

## உயர்தொழில் புரியும் மற்றைய உறுப்பினர்களுடனான தொடர்பு.

56. சட்டத்தரணியொருவர் எல்லா உயர்தொழில் விடயங்களிலும் தமது உயர்தொழிலில் ஈடுபட்டிருக்கும் சக உறுப்பினர்களுடன் பண்புடனும் மரியாதையுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்ளல் வேண்டும்.

57. சட்டத்தரணியொருவருக்கு எதிர்த் திறத்தவருடன் அத்தகைய திறத்தவரைப் பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணியின் சமூகத்திலும் சம்மதத்துடனும் தவிர தொடர்பு வைத்திருப்பது தகாத செயலாதல் வேண்டும்.

58. சட்டத்தரணியொருவர் ஏதேனும் உயர்தொழில் விடயத்தை நடாத்துகையில் தமது சொந்த உணர்ச்சிகள் அல்லது அக்கறைகள் செல்வாக்குச் செலுத்துவதை அனுமதித்தல் ஆகாது.

59. மேற்கூறப்பட்டுள்ள நெறிகள் ஏதேனும் உயர்தொழில் விடயத்தில் சட்டத்தரணியொருவருக்கு எதிராக சட்டத்தரணி அல்லாத ஓர் ஆள் இருக்கும் போதும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

60. சட்டத்தரணியொருவர் நன்மதிப்புப்பெற்ற அத்துடன் திறமைவாய்ந்த சட்டத்தரணிகளால் மானங்கெட்டது அல்லது நேர்மையற்றது என நியாயமாகக் கருதப்படக்கூடியவாறான எவ்விதத்திலும் அல்லது சட்டத்தரணியொருவராக இருப்பதற்குத் தகுதி இல்லாதவராக்குகின்ற அல்லது உயர்தொழிலில் அவரின் சகாக்களால் கீழ்த்தரமானது எனக் கருதப்படக்கூடியவாறான எவ்விதத்திலும் நடந்துகொள்ளல் ஆகாது.

61. சட்டத்தரணியொருவர் சட்டத்தரணியொருவருக்கு ஆகாத எவ்விதத்திலும் நடந்து கொள்ளல் ஆகாது.

62. மேற்கூறப்பட்டுள்ள விதிகள் எல்லாவற்றையும் பூரணமாக உள்ளடக்கியனவன்று.